JARJ SINCE 1951 Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
Mohammed Harris, JARJ-Vol-3-1-May-2022:235-241 ISSN(O): 2582-5941

# Monotheism in the poems of Kaviko Abdul Rahuman

**கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதைகளில் ஓர் இறைத்தத்துவம்**

**Dr. A. M. Mohammed Harris**
Assistant Professor, Research Department of Tamil,
Jamal Mohammad College (Autonomous), Tiruchirappalli - 620 020.

**Abstract:**

Today's human life is full of religious misunderstandings. At their base fights arise and unrest arises. Thus human unity is distorted and love in the human mind has changed into hatred. When there is an understanding between religions there is a theological idea that there is only one God and there are many thousands of names for him. Many poets have written poems in the style of 'Kaviko Abdul Rahuma', which explores and clarifies in the minds of the people by their thoughts that 'God is It is a mistake to say that Islam only proclaims one God. Islamic poets tend to expose to us the philosophical nature of all religions claiming to be monotheistic. Through love'. The Lord is the only one who claims Himself all the time. The purpose of the article is to explore and establish this character.

**Key Words:** A theological philosophy, the need for incarnation, Messenger and Biology, the similarity between the occult, Religious Reconciliation

Corresponding Author E-Mail: mohamedharis2008@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:**

இன்றைய மனித வாழ்வில் சமயம் சார்ந்த புரிதலின்மை நிறைந்து உள்ளது. அவற்றின் அடிப்படையில் சண்டைகள் ஏற்பட்டு அமைதியின்மை எழுகின்றது. இதனால் மனித ஒற்றுமை சிதைந்து மனிதன் மனதில் அன்பின்றி வெறுப்புணர்வு பெருகி விடுகின்றது. சமயங்களுக்கு இடையே உள்ள புரிதல் ஏற்படுகின்றபோது இறைவன் ஒருவனே அவனுக்கு பெயர்கள் பல ஆயிரம் என்ற இறையியல் சார்ந்த எண்ணங்களினால் மக்களின் மனத்தில் 'அன்பின் வழியே இறை' என்பதை உணர்ந்தி அத்தகைய இறை ஓரிறைவனே என்பதை ஆராயந்து தெளிவுபடுத்தும் தன்மையில் கவிஞர்கள் பலர் கவி படைத்துள்ளனர் அவ்வகையில் 'கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதைகளில் ஓர் இறைதத்துவம்' மிகுந்து காணப்படுகின்றது. இஸ்லாம் மட்டுமே ஓர் இறையைப் பறைசாற்றுகிறது என்று கூறுவது பிழையாகும். எல்லா சமயமும் ஓரிறைவனையே கூறுகின்றது என்ற மெய்யியல் தன்மையை இசுலாமியக் கவிஞர்கள் நமக்கு புலப்படுத்த முனைகின்றனர். இவரின் கவிதைகளின் வழியாக சமயங்கள் இடையே உள்ள வேறுபாடுகளை கலைந்து இறைவன் ஒருவனே அவனையே எல்லா சமயமும் கூறுகின்றது. இத்தன்மையை ஆராய்ந்து நிலைநாட்டுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

ஓர் இறைத் தத்துவம், அவதாரத்தின் தேவை, இறைத்தூதும் வாழ்வியலும், மறைகளுக்கிடையே உள்ள ஒற்றுமை, சமய நல்லிணக்கம்

**மனிதனைச் சமைக்கவே சமயங்கள்**

உலகத்தில் தோன்றிய அத்துனைச் சமயமும் ஒரே இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்டது. அந்தந்த நிலத்தில் வாழும் மக்களின் காலத்திற்கும் மனிதனின் மனப் பக்குவத்திற்கும் ஏற்ப இறைமறை வழங்கப்பட்டது. மனித மனத்தைச் சமைப்பதற்காகவே சமயம் எழுந்தன. இச்சமயம் மனித வாழ்வோடு ஒன்றியுள்ளது. பிறப்பு தொடங்கி இறப்பு வரை சமயம் மனித வாழ்வின் ஒட்டி உள்ளது. இச்சமயம் தான் தனித்தனியாக பிரிந்து கிடந்த மனித இனத்தை ஒன்றுபடுத்தியது. ஆனால், இப்போது மனித இனத்தை பிளவு படுத்துவது இச்சமயம் தான் என்று எண்ணும் நிலைக்கு மாறி உள்ளது அல்லது மாற்றப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் புரிதல் இன்மையே எனலாம். எந்த சமயம் எல்லா நிலத்திற்கும் எல்லா காலத்திற்கும் ஒத்து வருகின்றதோ அந்த சமயம் முழுமை பெற்றது எனலாம். உதாரணத்திற்கு நம் மண்ணில் காலத்திற்கு ஏற்றாற்போல் வாழ்வு முறையை வழிகாட்ட அவதாரங்கள் அடுத்தடுத்த காலத்திற்கு ஏற்றாற்போல் தோன்றின. நம் மண்ணில் மச்சவதாரம் மட்டுமே போதும் என்றால் கூர்மவதாரம் ஏன் தோன்றியது. கூர்ம அவதாரம் மட்டுமே போதுமென்றால், வராக அவதாரம் ஏன் தோன்றியது. வராக அவதாரம் மட்டுமே போதும் என்றால் சிம்மா அவதாரம் ஏன் தோன்றியது. சிம்மா அவதாரம் மட்டுமே போதும் என்றால் வாமண அவதாரம் ஏன் தோன்றியது. வாமண அவதாரம் மட்டுமே போதும் என்றால் பரசுராம அவதாரம் ஏன் தோன்றியது. பரசுராம அவதாரம் மட்டுமே போதும் என்றால் இராம அவதாரம் ஏன் தோன்றியது. இராம அவதாரம் மட்டுமே போதும் என்றால் பலராம அவதாரம் ஏன் தோன்றியது. பலராம அவதாரம் மட்டுமே போதும் என்றால் கண்ண அவதாரம் ஏன் தோன்றியது. கண்ணஅவதாரம மட்டுமே போதும் என்றால் இறுதி அவதாரமான கல்கி அவதாரம் ஏன் தோன்ற வேண்டும். ஒன்றின் தேவையும் புலக்கமின்மையும் வரும்போது அடுத்த தேவை எழுகின்றது. கல்கி அவதாரத்துக்கு பின்னும் முஹம்மது நபிக்குப் பின்னும் அவதாரங்களோ நபிகளோ மீண்டும் தேவை இல்லாவண்ணம் முழுமையாக மறை பூர்த்தியாகிவிட்டது. என மறைகள் கூறுகின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால் ஒரு செல் உயிரினம் அமீபாவில் தொடங்கிய உயிரின பரிணாம வளர்ச்சியால் மனித இனம் என்ற உச்சத்தோடு முழுமை பெறுகின்றது. அதுபோல அவதாரமும் நபித்துவமும் கல்கி மற்றும் முகமது நபி(சல்) மூலம் முழுமை பெறுகின்றது. உலகில் எல்லா பகுதிக்கும் இறைவன் மக்களை நேர்வழிப்படுத்த தமது தூதர்களை அனுப்பினான். அவர்களுக்கு மறையையும் சட்டத்தையும் வழங்கினான். அத்தூதர்களும் அவர்கள் வழங்கிய சட்டங்களும் வேறுபடும். ஆனால், வேதங்களின் உண்மை நிலை மாறுவதில்லை. அவ்வுண்மையில் முதன்மையானது ஓரிறைத் தத்துவமாகும் இத்தத்துவம் எல்லா வேதங்களிலும் மாறாத பதிந்துள்ளது.

**"ஒவ்வொரு வகுப்பினருக்கும் நம்மால் அனுப்பப்பட்ட ஒரு தூதர் உண்டு"1**

இத்தூது எதற்கென்றால் உண்மையை நிலைநாட்டவே அமைகிறது எங்கெல்லாம் இவ்வுண்மை மறக்கப்பட்டு உண்மைக்கு மாறு ஏற்படுகின்றதோ அப்பொழுது

**"எப்போதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் எழுச்சி பெறுமோ அப்போது நான் என்னை பிறப்பித்துக் கொள்கின்றேன்"2**

மனித குலத்தை அறத்தின் பக்கம் நடத்தவும் அறவழி தவறிய மனிதரை
எச்சரிக்கவே அவதாரங்கள் தோன்றியதாகக் கூறப்படுகிறது இத்தன்மை திருக்குர்ஆனில்

**"அச்சமூட்டி "எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வாராத எந்த வகுப்பாரும் பூமியில் இல்லை"3**

என்று இறைவன் தனது திருமறையில் குறிப்பிடுகின்றான். மேலும், அத்தகைய தூதர்கள் வாழ்ந்த நிலத்தில் உள்ள மொழியின் வழியாகவே மறை வழங்கப்பட்டது என்பதை,

**"(நபியே) ஒவ்வொரு தூதும் (தம் மக்களுக்கு) தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு, அவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்"4**

எனவே, நிலம் மொழிக்கு ஏற்ப மறை வழங்கப்பட்டது என்பதை நம்மால் உணர முடிகின்றது. மேலும், எல்லா நபிமார்களைப் பற்றியும் இறைவன் திருக்குர்ஆனில் கூறவில்லை, தூதர்களாக அவர்களில் சில நபிமார்களின் வரலாற்றை மட்டும் இறைவன் கூறியுள்ளான் என்பதை,

**"நபியே! நிச்சயமாக உமக்கு முன்னர் தூதர்கள் பலரை அனுப்பினோம் அவர்களில் சிலருடைய சரித்திரத்தை நாம் உமக்கு கூறியிருக்கின்றோம் அவருடைய வரலாற்றை நாம் உமக்குக் கூறவில்லை"5**

என்று இறைவன் நபியின் வழியாக உலகிற்கு அறிவிப்பு செய்கின்றான். எனவே, அனைத்து இறைத்தூதர்களையும் அனைத்து மறைகளையும்

ஏற்பவரே முழுமையான முஸ்லிம் ஆவார். அதாவது, எல்லா மறையில் உள்ள உண்மைகளை மட்டும் ஏற்க வேண்டும். உண்மையே நிரந்தரமானது. அவ்வுண்மை ஒன்று தான் மாறாது. அவ்வுண்மையின் ஊற்றாக இருக்கின்ற இறைவன் ஒருவனே.

**ஓர் இறைத்தத்துவம்**

சில சமயம் பல தெய்வங்களைச் சுட்டுவதாக இருப்பினும் இணங்கி பார்க்கின் அச்சமயங்களில் இறைவன் ஒருவனே என்ற பொருண்மை ஊடுருவியுள்ளதைக் காணமுடிகின்றது. எல்லாச் சமயங்களிலும் புறநிலை பாடு அகநிலை பாடு என்பது உள்ளது. புறநிலை பாடு சமயத்திற்கு சமயம் மாறுபடும் ஆனால் அக நிலைப்பாடு மாறுபடாது. அத்தகைய அகநிலையாவற்றிலும் முக்கியமானது ஓர் இறை தன்மையாகும். அனைத்து சமயமும் இறைவன் ஒருவனே என்ற பதத்தில் ஒன்றுபட்டு போகின்றது. அத்தகைய இறைவனுக்கு உருவம் இல்லை என்பதை, யஜுர் மறையில்

**'ந தஸ்ய பிரதிமா அஸ்தி'6**

இதன் பொருள் இறைவனுக்கு உருவமில்லை என்பது ஆகும் இதில் பிரதிமா என்ற சொல்லுக்கு பிரம்மம் என்று பொருள்படும், இவற்றோடின்றி,

**"ஏகம் ப்ரஹம் த்லித்ய நாஸ்தே/ எநன் நா நாங்கே கின்சன்"7**

தெய்வ வாக்கிங் பொருள் இறைவன் ஒருவனே இருவர் இல்லை இல்லவே இல்லை இல்லவே இல்லை சிறிது கூட இல்லை என்று 'பிரம்ம சூத்திரம்' அறுதியிட்டு மனிதர்களுக்கு பகர்கின்றது. அதர்வண மறையில், அந்யதா சரணம் நாஸ்தி என்ற பகுதியில்,

**"அந்யதா சரணம் நாஸ்தி த்வம் ஏவ சரணம் மம/ தங்மாத் காருண்ய பாவேன ரக்ஷ்ஷ ரக் மஹேங்வதர்"8**

இதன் பொருள் இப்பரம்பொருளைத் தவிர வேறெதற்கும் சரணடைவதில்லை என்ற உறுதி வெளிப்படுத்துகிறது. மேலும், இறைவனின் குணங்களைக் குணத்தன்மையை உணர்ந்த அறிஞர்கள் இறைவனின் குணத்தை உணர்த்தும் பெயர்களைச் சூட்டி இறைவனை வணங்கி மகிழ்ந்தனர் இத்தன்மையை

**"அவர்கள் கடவுளை வர்ணன், இந்திரன், மித்திரன், சூரியன், அக்னி என பல பெயர்களில் அழகுபட அழைத்தனர் இவை அனைத்தும் அவனின் தன்மைகளை சிறப்பை உணர்த்துவதாக இருந்தன"9**

இவ்வாறு மேலே கூறியதைப் போல பெயர் வெவ்வேறாக இருப்பினும் கடவுள் என்பது ஒரே பரம்பொருளே என்று நாம் உணர முடிகின்றது.

மேலும், பகவத்கீதையில்,

**"நீங்கள் சூரியனையும் சந்திரனையும் வழிபடுகிறார்கள்! அவ்வாறு வழிபடுவதும் என்னையே சேருகிறது என்றாலும், அது எப்படிப்பட்டது எனில் ஓர் செடியின் வேரிலே நீர் ஊற்றாமல் அதன் காயிலும் கனியிலும் நீர் ஊற்றுவதற்கு ஒப்பாகும்"10.**

இதில் வேரில் நீர் ஊற்றுதல் என்பது பரம்பொருளை வழிபடுவதாகும் காயிலும், கனியிலும் நீர் ஊற்றுதல் என்பது பரம்பொருளுக்கு இணையாக மற்றவற்றை வழிபடுவதாகும்.

**"வேறுபடும் சமயமெலம் புகுந்து பார்க்கின்/ விளங்கும் பரம்பொருளே"11**

இந்த தன்மையைக் காண முடிகிறது என்பதைக் கவிஞர்

**"நான்/ எங்கே சென்றாலும்/ அது உன் சபையாகவே/ இருக்கிறது"12**

இத்தன்மையை கவிக்கோ அப்துல் ரகுமான் தன் கவிதைகளில் பதிவு செய்து சமய நல்லிணக்கத்தை மக்கள் மனதில் பதிகிறார். இப்பரம்பொருளையே எல்லா சமயமும் அழைக்கின்றது என்பதை பாரதியார் ஆத்திச்சூடியில்,

**"ஆத்திச்சூடி இளம்பிறை அணிந்து / மோனத் திருக்கும் முழுவெண் மேனியன்/ கருநிறங் கொண்டு பாற்கடல் மிசைக் கிடப்போன்/ முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்/ ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்/ உருவகத் தாலே உணர்ந்து உணராது/ பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்/ ஒன்றே அதனியல் ஒளியுறு மறிவாம்/ அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்/ அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்"13**

என்று பாரதியார் கூறுகின்றார். இறைவன் ஒருவனே அவன் பெயரையே பலர் தாம் உணர்ந்த வாரு இறைப் பண்பினைப் பெயராகச் சூட்டுகின்றனர் என்பதை பாரதியார் நமக்கு புலப்படும் வண்ணம் கடவுள் வாழ்த்தாக படைத்துக் காட்டுகிறார் இத்தன்மையை கவிக்கோ அப்துல் ரகுமான்

**"அரன் என்றழைப்பினும்/ வரம் கொடுப்பவன் நீ/ அரியென றிசைப்பினும்/ சரியென் றிசைப்பாய்/ கர்த்தர் என்றுரைப்பினும்/ அர்த்தம் நீதான்/ அல்லா எனினும் நீ/ அல்லாது வேறு யார்?"14** என்று கவிக்கோ அப்துல் ரகுமான் இறைவனின் பெயர் வெவ்வேறாக இருப்பினும் இறைவன் ஒன்றுதான் என்ற வேதக்கருத்துக்களைக் கவி புனைந்து மனித இனம் உணர்ந்து அன்பு பாராட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வண்ணமாக உணர்த்துகின்றார். மேலும், கிறித்தவ சமயத்தின் மறை,

**"என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் ஆகாது. மேலும், விண்வெளியில் கீழே மண்ணுலகில், பூமிக்கு அடியில் நீர்த்திரனில் உள்ள யாதொன்றின் சிலையோ ஓவியத்தையும் நீ உருவாக்க வேண்டாம்! நீ அவற்றை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை செய்ய வேண்டாம். ஏனெனில், உன் கடவுளும், ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ள மாட்டேன்"15**

என அல்லேலுயா கூறுவதாக திருவிவிலியம் எடுத்துரைக்கின்றது. இறைவனுக்கு உருவம் வழங்குதல் முடியாத ஒரு தன்மை உடையது எனவே அச்செயலை செய்வது பாவத்திற்கு உரியது என்பதை திருவிவிலியம் மனிதனை எச்சரிக்கின்றது. இத்தன்மையை கவிஞர்

**"உன்னை/ வரைய முடியாது/ பூவை வரையலாம்/ வாசனையை/ எப்படி வரைவது?"16**

இக்கவிதையில் பூவை அழகாக ஓவியம் வரைந்து விடலாம் ஆனால், அதன் மணத்தை வரைய முடியாது. இறைவனின் குணத்தின் ஒருசில தன்மையினை சிலையாக வடித்து விடலாம். சான்றாக கொற்றவையின் சினம் கொண்ட உருவத்தை கல்கத்தா காளி சிலையின் மூலம் நாம் அறியலாம். ஒவ்வொரு சிலையும் இறைவனின் ஒவ்வொரு குணத்தை மட்டும் வெளிப்படுத்தும் தன்மையாக உள்ளது. ஆனால், முழு இறைவனின் தன்மையை எவராலும் சிலையாக, ஓவியமாக வரைந்து விடமுடியாது என்பதை கவிஞர் அழகுற புலப்படுத்துகிறது.

**இறைவனை உணராமல் பூசல்**

இன்றைய காலகட்டத்தில் இறைவனின் பெயர் சொல்லி பூசை மட்டுமல்ல, பூசல்களும் நடக்கின்றன. அதற்கு, காரணம் இறைவனின் அன்பார்ந்த பண்பு மனிதனிடம் இல்லாமையும் மனிதனின் சுயநலமும் எனலாம். இத்தன்மையைத் திருக்குர்ஆன்,

**"மேலும், அவர்களிடம் நீங்கள் பூமியில் குழப்பம் செய்யாதீர்கள் என்று கூறப்பட்டால்; அதற்கு அவர்கள் நிச்சயமாக நாங்கள் சீர்திருத்தம் செய்வோர்தாம் (குழப்பவாதிகளல்ல) எனக் கூறுவார்கள். தெரிந்து கொள்வீராக! நிச்சயமாக அவர்கள்தான் குழப்பம் செய்கின்றார்கள் எனினும் (இதை) உணர மாட்டார்கள்"17**

என்று திருக்குர்ஆன் மனித ஒற்றுமையை குழப்ப வரை குழப்பவாதிகள் என்று பறைசாற்றுகின்றது இத்தன்மையை கவிஞர் **"ஒன்றாகத்தான் இருந்தோம்/ படைப்பு நம்மை/ வகிடெடுத்துப்பிரித்துச்/ சடைப்பின்னிப்/ பூ வைத்தது"18**

இக்கவிதையின் வழி இறைவனின் உன் அத்தை உணர்ந்த மனிதன் அவனின் படைப்புத் திறனால் அவன் உணர்ந்த இறைவனின் குணத்தை வடிவமாக்கி தன் பக்தியை வெளிப்படுத்தினான் இதன் வழியாக பிரிவுகள் தோன்றி மனிதகுலம் மனிதகுலம் பின்னலாக பின்னிப்பிணைந்து சிக்கல் ஏற்பட்டு விட்டது என்பதை குறியீட்டின் வாயிலாக படைத்துக் காட்டுகின்றார். மேலும் ஓரிறைவனையே நாம் அனைவரும் தேடும் முயற்சியில் அல்லது உணரும் முயற்சியில் இருக்கின்றோம் என்பதை கவிஞர்

**"உன் பாதையும் /**

**என் பாதையும்/ வெவ்வேறாக இருக்கலாம்/ ஆனால் அவை/**

**ஒரே கையின் ரேகைகள்"19**

JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
Mohammed Harris, JARJ-Vol-3-1-May-2022:235-241 ISSN(O): 2582-5941
SINCE 1951

சமயங்களில் வேறுபாடுகள் இருக்கின்றன வேறுபாடுகள் இருப்பினும் சென்று சேரும் பாதை ஒரே இறைவனின் சென்றடையும் பாதைதான் என்பதை கவிஞர் குறியீட்டின் வாயிலாக நமக்கு அறிவுறுத்துகின்றார் மேலும் எல்லா சமயங்களையும் இறைவன் தான் தூக்கி தோற்றுவித்தான் என்பதை **"ஒரே சூரியன்தான்/ வெவ்வேறு நாட்களை/ உண்டாக்குகிறான்"20**

இக்கவிதையின் வழி ஒரே இறைவன் தான் மனிதனின் மன வளர்ச்சிக்கும் காலத்தின் சூழலுக்கு ஏற்றாற்போல மக்களுக்கு இறைத்தூதர் அல்லது அவதாரத்தின் வழியாக தனது ஞானத்தையும் கவிஞர் வேதத்தையும் வழங்கி மக்கள் வாழும் முறையை இறைவன் கற்றுத் தந்தான் இத்தன்மையை கவிஞர் குறியீட்டின் வாயிலாக ஒரே சூரியன் தான் வெவ்வேறு நாட்களில் உண்டாக்கினான் உண்டாக்குகிறான் என்பதில் கடவுள் சூரியன் என்பது கடவுளுக்கு குறியீடாகும் நாட்கள் என்பது குறிப்பிட்ட காலத்தில் வந்த தீர்க்கதரிசி அல்லது அவதாரம் இது இவற்றிற்கான குறியீடாகவும் அந்நாட்களில் வெளிப்பட்ட வாழ்வு ஞானம் வேதமாகவும் கவிஞர் குறிப்பிடுகின்றார் மேலும்

**“உன் ஒவ்வொரு**
**அபிநயத்திலும்/ ஒவ்வொரு நாமம் /ரூபகம் கொண்டது”21**

இக்கவிதையில் இறைவனின் ஒவ்வொரு குண நிலையும் ஒவ்வொரு அபிநயம் ஆகும் அந்த அபிநய வெளிப்பாட்டு குணமாகிய தன்மையில் நாமம் பிறக்கின்றது. குணத்தை ஊமையாக விளக்கம் முயற்சித்தான் மனிதன் உருவகம் ஆகிவிட்டான் அவ்விதமே உருவாய் இறைவனுக்கு வழங்கப்பட்டது. எனவே இறைவனை உணர்தல் என்பது யானையை உணர உட்பட்ட குருடர் நிலைப் போன்றதாகும். நான்கு கண்பார்வையற்றோர் யானையைக் காண முற்படுகின்றனர். ஒருவர் யானை என்பது உலக்கை என்று கூறினார். இன்னொருவரோ யானை என்பது தூண் என்று கூறினார். மூன்றாம் நபரோ யானை என்பது முரம் என்று கூறினார். நான்காம் நபரோ யானை என்பது துடப்பம் என்று கூறினார். நால்வர் உணர்ந்ததும் உண்மையே ஆகும். ஆனால் அவ்வுண்மையில் முழுமை இல்லை. ஒருவர் கையில் சிக்கியது யானையின் தும்பிக்கை இரண்டாம் நபரின் கையில் சிக்கியது யானையின் கால் மூன்றாம் நபரின் கையில் சிக்கியது யானையின் காது நான்காம் நபரின் கையில் சிக்கியது யானையின் வால் இத்தன்மையை கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் குருடர்களின் யானை என்ற தலைப்பில்

**" ஒவ்வொரு குருடனுக்கும் / ஏதாவது ஒன்று/ அகப்படுகிறது/ நிற்கும் இடத்தை பொறுத்து/ அகப்படுகிறது கைகளுக்குதான்/ கண்களுக்கல்ல/ ஏனெனில் அவர்கள்/ காண முடியாதவர்கள்"22**

மக்கள் வாழ்கின்ற இடததிற்கும் காலத்திற்கும் ஏற்ப இறைவன் பற்றி ஞானத்தைப் பெறுகின்றனர். அவர் பெற்ற ஞானம் முழுமையாக இறைவனை அறியும் ஞானமாக இருக்க முடியாது.

ஏனெனில் இறைவன் எல்லை அற்றவன். இறைவனைப் பற்றி ஒவ்வொருவரும் அறிந்த ஞானம் உண்மையானதே ஆனால் அவை முழுமையானதல்ல எல்லோருடைய ஞானத்தையும் ஒன்று சேர்த்தாலே அது முழுமையான ஞானமாய் அமையும் இத்தன்மையை கவிஞர்

**"உண்டு'ம்/ இல்லை'யும் சேர்ந்ததே/ முழு உண்மை/ எல்லா பக்கமும்/ நின்று பார்ப்பவனே/ உண்மையை/ முழுமையாக/ தரிசிக்கிறான்”23**

என்று இன்றைய சமயப் பூசல் எழுவதற்கான காரணத்தை கவிஞர் அனைவரும் உணரும் வண்ணம் மாகவி படைத்துள்ளார்

**தொகுப்புரை**

- ❖ சமயம் என்பது மனிதனை பக்குவம் அடையச் செய்வதே கவிக்கோ அப்துல் ரஹ்மான் கவிதை வழி உணர்த்தப்பட்டுள்ளது.
- ❖ எல்லா சமயங்களிலும் ஓர் இறைத் தத்துவம் உள்ளமையை மறைகளின் வழி ஆராயந்து கவிக்கோவின் கவிதையின் உள்ளமையை நிரூபிக்கப்பட்டுள்ளது
- ❖ இறைவனையும் மற்ற சமயங்களில் முழுமையாக உணராமையே இறைப் பூசலுக்கு காரணங்கள் என்பதை கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதை வழி ஆராயப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. திருக்குரான் - 35:24
2. பாரதியார் மொழிபெயர்ப்பு, ஸ்ரீகீதைப்பாட்டு, பாரதியார் புத்தகாலயம், சென்னை -17, முதல் பதிப்பு - 1997. (கீதை-4:7)
3. திருக்குர்ஆன்-35:24
4. மேலது -14:4
5. மேலது -40:78
6. http://syiya-syliya.blogspot.com
7. http://syliya-syliya.bogspot.com/2010/06/blog-post_1572.html?m=1
8. ரவி.கே.காணல் நீரைக் கடந்து, நிவேதிதா பதிப்பகம், சென்னை -92, முதல் பதிப்பு -2019. ப.-637
9. சிவத்தியாநாதத்த மஹர்ஷி (தமிழாக்கம்), ரிக் வேத ஸம்ஹிதை சாது அச்சுக்கூடம், சென்னை, முதல் பதிப்பு -1937. (ரிக்-1:164:46)
10. வலம்புரிஜான், பிராத்தனைப் பூக்கள், ஆஸாத் பதிப்பகம், சென்னை-86, முதல் பதிப்பு - 2021. (ப.78)
11. முனைவர் ஆறுமுகம், ப., (ப.ஆ), தாயுமாணவ சுவாமி பாடல்கள், பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108, முதல் பதிப்பு -2005. (ப.217)
12. அப்துல் ரகுமான், மின்மினிகலால் ஒரு கடிதம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2004. (ப. 142)
13. பாரதியார், பாரதியார் பாடல்கள், சாரதா பப்ளிகேஷன்ஸ், சென்னை-14, முதல் பதிப்பு -2005. ப.ஆ. கமலா முருகன் (ஆத்திச்சூடி கடவுள் வாழ்த்து)
14. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, நான்காம் பதிப்பு – 2004. (ப.26)
15. திருவிவிலியம் 20:3-05
16. அப்துல் ரகுமான், மின்மினிகலால் ஒரு கடிதம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2004. (ப.137)
17. திருக்குர்ஆன்-2:11-12
18. அப்துல் ரகுமான், ரகசியப் பூ, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2005. (ப.148)
19. அப்துல் ரகுமான், மின்மினிகலால் ஒரு கடிதம், நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2004. (ப.10)
20. அப்துல் ரகுமான், ரகசியப் பூ, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2005. (ப.62)
21. அப்துல் ரகுமான், பறவையின் பாதை, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -2006.
22. அப்துல் ரகுமான், ஆலாபனை, நேஷ்னல் பப்ளிகேஷன்ஸ், சென்னை -17, முதல் பதிப்பு -1995. (பக்.93-94)
23. மேலது, (பக்.95-96)

**Reference:**

1. Quran - 35:24
2. Bharathiyar (translation),Sri Geethai paatti,BharathiyarButhagaalayam,chennai-17. First edition-1997.Author:Prof.Shanmuga Pillai. Keethai -4:7
3. Quran -35:24
4. Ibid -14:4
5. Ibid -40:78
6. http://syiya-syliya.blogspot.com
7. http://syliya-syliya.bogspot.com/2010/06/blog-post_1572.html?m=1
8. RaviK.Kaanal Neeraj Kadanthu, publication,Chennai 92.First edition-2019. p.637
9. Sivathiyanaananda Maharishi (translation), Rigvedha Samhidai,

Saadhu printers, Chennai,first edition-1937. Reek.-1:164:46
10. Valamburi John, Praarthanai Pookkal,Azad printers, Chennai 86, first edition-2001. p.78.
11. Dr.Arumugam B. Publisher, Thayumaanaswamy Padalgal,Boobbukar publication, Chennai 108. First edition-2005. p.217.
12. Abdul Rahuman, Minminikalaal Oru Kaditham, National publication, Chennai-17. First edition-2004. p.142.
13. Bharathiyar, Bharathiyar Padalgal.Saratha publication, Chennai 14. First edition-2005. Publisher: Kamala Murugan. (Athichudi Kadavul Valthu padal)
14. Abdul Rahman. Neyarviruppam, National publication, Chennai 17. Fourth edition-2004. p.26.
15. bible - 20:3-05
16. Abdul Rahuman, Minminikalaal Oru Kaditham, National publication, Chennai-17. First edition-2004. p.137.
17. Quran - 2:11-12
18. Abdul Rahman. Ragasiya Poo. National publication, Chennai 17.first edition-2005. p.148.
19. Abdul Rahuman, Minminikalaal Oru Kaditham, National publication, Chennai-17. First edition-2004. p.10.
20. Abdul Rahman. Ragasiya Poo. National publication, Chennai 17.first edition-2005. p.62
21. Abdul Rahman. Paravayin Paathai, National publication, Chennai 17. First edition -2006. p.38.
22. Abdul Rahman. Alaabanai, National publication, Chennai 17. First edition-1995.pp.93-94.
23. Ibid - pp.95-96